நாள் 14.03.2025

CC 75/2016

அசா 1

பெயர் : மதனகோபால்

த/பெ.ராமகிருஷ்ணன்

(Accused 2 present. Accused advocate present. Accused 1, 3 absent. Petition u/s.317 Crpc filed and allowed. Accused advocate present)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. எனக்கு தானசெட்டில்மென்ட் எழுதி வைத்த லட்சுமண கவுண்டருக்கு எனது தாயார் ராஜேஸ்வரியும் இவ்வழக்கின் 4 ம் எதிரியும் மகள்கள் என்றால் சரிதான். எனக்கு தாத்தா உயில் எழுதி வைக்காமல் காலம் சென்றிருந்தால் மேற்படி 4 ம் எதிரிக்கும் எனது தாயாருக்கும் வாரிசுரிமை அடிப்படையில் மேற்படி சொத்துக்கள் பாத்தியப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 27.01.2004 அன்று என் பெயரில் என் தாத்தா தானசெட்டில்மென்ட் எழுதி வைத்தார். மேற்படி தானசெட்டில்மென்ட்டின் சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி பத்திரத்தில் சாட்சி கையொப்பமிட்டவர்களில் ஒருவர் ஈரோடு மற்றும் இன்னொருவர் ராசிபுரத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

2. எனக்கு செட்டில்மென்ட் எழுதிக்கொடுத்த பிறகு எனது தாத்தா 18.08.2005 அன்று தேதியிட்டு பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் செட்டில்மென்ட் ரத்து செய்ய பத்திரம் கொடுத்தார் என்றால் சரிதான். 18.08.2005 அன்று மேற்படி பத்திரத்திற்கு முத்திரைத்தாள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். 22.09.2005 அன்று மேற்படி தானசெட்டில்மென்ட் ரத்து பத்திரத்திற்கு முத்திரை தீர்வை செலுத்தி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தின் தாத்தாவின் கைரேகையிட்டு விலாசம் பின்புறம் எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறுதான் காணப்படுகிறது.

3. மேற்படி பத்திரத்தில் நில உடைமை பட்டா எண் 229116 சரிபார்க்கப்பட்டது என்ற வாசகங்கள் காணப்படுகிறது என்றால் சரிதான். 27.01.2004 அன்று என் பெயரில் எழுதப்பட்ட தானசெட்டில்மென்ட் பத்திரத்தில் உள்ள சொத்துக்களுக்கு 2006 ம் வருடம் பட்டாவில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. 27.01.2004 தேதியில் எனது பெயருக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்ட நாளில் இருந்து 22.09.2005 தேதியில் மேற்படி தானசெட்டில்மென்ட்

ரத்து செய்த நாள் வரை மேற்படி சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அது வருவாய் அலுவலகத்தின் தரப்பில் தாமதமாகியுள்ளது.

5. 27.01.2004 தேதிக்கு பின்னிட்டு மேற்படி தானசெட்டில்மென்ட் பத்திர அடிப்படையில் வருவாய்துறையினருக்கு எனது பெயரில் பட்டா மாற்றம் செய்ய கொடுத்த விண்ணப்ப நகலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தானசெட்டில்மென்ட் ரத்து பத்திரத்தில் எதிரிகள் 1, 2, 3 ஆகியோர் கையொப்பமிடவில்லை என்றால் சரிதான்.

6. 1 , 2, 3 எதிரிகள் தானசெட்டில்மென்ட் ரத்து ஆன பிறகு மேற்படி சொத்துக்கள் தங்களுக்கும் உரிமைப்பட்டது என்று வழக்கு எதுவும் தொடரவில்லை என்றால் சரிதான். மேற்படி தானசெட்டில்மென்ட் ரத்து செல்லாது என்று நான் விளம்புகை பரிகாரம் கோரி பொள்ளாச்சி, சார்பு நீதிமன்றத்தில் நான் தொடர்ந்த வழக்கு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதன்மீது எதிரிகள் மேல்முறையீடு செய்துள்ளனர் என்றால் சரிதான்.

7. போலி பட்டா பாஸ் புத்தகம் கொடுத்து எனது தாத்தா தானசெட்டில்மென்டை ரத்து செய்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அது குறித்து வருவாய் துறையினர் விசாரித்த பிறகுதான் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். வருவாய் துறையினர் என் தாத்தா மீது குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்தனர். சிறிது காலத்தில் என் தாத்தா இறந்துவிட்டார். அதே காலகட்டத்தில் என் தாயாரும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் தாத்தா இறந்துவிட்டதால் குற்றவியல் நடவடிக்கை அவர் மீது கைவிடப்பட்டது என்றால் சரிதான்.

8. இவ்வழக்கின் நான்கு எதிரிகள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக்கோரி இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி எனது மனுவில் இவ்வழக்கின் நான்கு எதிரிகளும் போலி பட்டா பாஸ் புத்தகத்தை ஏற்படுத்தியதாக நான் கூறவில்லை என்றால் சரிதான்.

9. என் தாத்தாதான் போலி பட்டா பாஸ் புத்தகத்தை வைத்து தானசெட்டில்மென்ட் ரத்து பத்திரத்தை ஏற்படுத்தினார் என்றாலும் எனவே அவர் மீதுதான் குற்றவியல் நடவடிக்கை எடுத்திருக்க இயலும் என்றாலும் அவர் இறந்துவிட்டதால் எதிரிகள் மீதுள்ள காழ்ப்புணர்சியில் அவர்கள் மீது வழக்கு

தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி 2009 ம் வருடத்திய பத்திரத்தில் எதிரி கணேசன் சாட்சி கையொப்பமிட்டுள்ளார்.

10. நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில்தான் எதிரி கணேசன் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் போலீசாரிடம் ஒப்படைத்த பட்டா பாஸ் புத்தக நகலில் சார்பதிவாளரின் முத்திரை இல்லை என்றால் சரியல்ல. (எதிரி வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.